Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 59

சனிக்கிழமை
24 ஜனவரி 2026

தை 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



# ராஜபக்சக்களைப் போன்றே அநுர அரசிலும் இனவெறி!

## கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் கஜேந்திரகுமார் எம்.பி. விளாசல்

**கொழும்பு, ஜனவரி 24**

**ராஜபக்சக்களின் காலத்தில் இடம்பெற்ற இனவெறிச் செயற்பாடுகளைப் போன்றே, தற்போதைய அரசாங்கத்திலும் இன வெறி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. கிவுல் ஓயா திட்டம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.**

»11

# அரசியலில் இருந்து என்னை ஒதுக்கிவைக்கச் சதித்திட்டம்

## சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 24
அரசியலில் இருந்து என்னை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். எமது கட்சியிலும் சிலர் அத்தகைய எண்ணத்துடன் செயற்படுகின்றனர். அது ஒருபோதும் நடக்காது - இவ்வாறு இலங்கைத்

»11

# பிரஜாசக்தி திட்டம் அரச கேலிக்கூத்து!

## மானிப்பாய் பிரதேசசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன. 24
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள பிரஜாசக்தி திட்டம் சட்டவிரோதமானது. ஆதலால், அந்தக் குழுவின் செயற்பாட்டை வலி.தென் மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி

»11

# முதலிடுவதற்கான சூழல் இலங்கையில் இல்லை!

## நிர்வாகச் சிக்கல்களால் தடை துருக்கியத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 24
முதலீடு செய்வதற்கான சூழல் இலங்கையில் இல்லை. நிர்வாகச் சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இதில் தாக்கம் செலுத்துகின்றன என்று இலங்கைக்கான துருக்கியத் தூதுவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முதலீடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான சூழல் இலங்கையில் இல்லை.
சிறிய சந்தை,

»11

# அனுமதிக் கட்டணமோ 200 ரூபா ஆக்கபூர்வமாக ஒன்றுமில்லை!

## வர்த்தகக் கண்காட்சி குறித்து பொதுமக்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், ஜன. 24
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இடம்பெற்றுவரும் நிலையில், அதற்குரிய உள்நுழைவுக் கட்டணமாக பெருந்தொகையை வழங்குகின்றபோதிலும், அதற்குக் காத்திரமான

»11

# வர்த்தகக் கண்காட்சியால் குப்பைமேடான முற்றவெளி

## இளங்குமரன் எம்.பி. விமர்சனம்

யாழ்ப்பாணம், ஜன. 24
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியால் யாழ்ப்பாணம் முற்றவெளியும், பண்ணைப் பகுதியும் குப்பை மேடாக மாறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தனது சமூக வலைத்தளத்

»10

## விடுதலைப் புலிகளைப்போன்று

# தனியான நிர்வாகத்தை நடத்த முயற்சிக்கின்றது ஆளுங்கட்சி!

## முன்னாள் அமைச்சர் சம்பிக்க குற்றஞ்சாட்டு



கொழும்பு, ஜன. 24
விடுதலைப் புலிகளைப்போன்று, தனியான நிர்வாக அலகுகளை வைத்து நடத்துவதற்கு ஆளுங்கட்சியினர் முயற்சிக்கின்றனர் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

»11

## யாழ். இந்துக்கல்லூரியின் சிவலிங்க வழக்கு

# விசாரணைக்கு எடுப்பதற்கு உயர்நீதிமன்றம் உத்தரவு!



யாழ்ப்பாணம், ஜன. 24
யாழ். இந்துக் கல்லூரியில் 2018ஆம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் அகற்றப்பட்டமைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கை, விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம்

»11

# மன்னார் மருத்துவமனையை மத்திய அரசுக்கு வழங்கலாம்

## மன்னார் நகரசபையில் தீர்மானம் தமிழரசுக்கட்சி கடும் கண்டனம்!

மன்னார், ஜன. 24
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையை மத்திய அரசின் அதிகாரங்களின் கீழ் ஒப்படைத்து, அதைத் தரம் உயர்த்துவதற்கு மன்னார் நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மன்னார் நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் நடை

»10

# ஜனாதிபதி அநுரவே இனவாதம் பரப்புகிறார்

கொழும்பு, ஜன. 24
நாட்டில் இன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியே இனவாதத்தைப் பரப்பும் நிலைமை காணப்படுகின்றது என்று, முன்னாள் அமைச்சர்

»10

முச்சந்தி முரளி

“மத்தளம் மாதிரி ரண்டுபக்கமும் அநுரவுக்கு அடிவிழுகுது கண்டியளோ”



# மக்கள் கோரினால் பதவிவிலகத் தயார்

## பிரதமர் ஹரிணி பகிரங்கம்

கொழும்பு, ஜன. 24
நம்பிக்கையில்லாப் பிரேரணையால் அச்சப்படவில்லை. ஏனெனில், மக்கள் கோரினால் பதவி விலகத் தயாராகவே உள்ளேன் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்ற உலகளாவிய வர்த்தக

»10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழில் இன்றும் நாளையும் சர்வதேச சட்ட மாநாடு!

## உள்நாட்டு, வெளிநாட்டு சட்ட நிபுணர்கள் பங்கேற்பு!

யாழ்ப்பாணம்,ஜன.24

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை இந்தியாவின் 'சுரானா மற்றும் சுரானா' சட்ட நிறுவனத்துடன் இணைந்து நடத்தும் 'யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு -2026' இன்று 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.**

கடந்த 2024ஆம் ஆண்டில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்த மாநாடு, 2025 இல் சர்வதேச ரீதியாகப் பரிணாமம் பெற்றது. அந்தத் தொடர்ச்சியில், இவ்வாண்டு மூன்றாவது முறையாக மிகவும் பிரமாண்டமாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இம்மாநாடு யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கில் இரு தினங்களும் காலை 9 மணி முதல் இடம்பெறவுள்ளது. மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதிபதி சிதம்பரம்பிள்ளை துரைராஜா, கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதிபதி ரோகந்த அபேசூரிய கலந்துகொள்ளவுள்ளனர். சிறப்பு விருந்தினராக அமைச்சின் மேலதிக செயலாளர் சரண்யா ஹஸந்தி உருகொடவத்தே திசாநாயக ஆகியோர் பங்கேற்பர். அன்றைய தினம் 'சட்டத்தின் எதிர்காலம்: ஆட்சி நிர்வாகம், தொழிநுட்பம், சமூகம் மற்றும் உலக பொருளாதாரம்' எனும் தலைப்பிலான முக்கிய மான குழுக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதில் சட்டத்தரணி லூவி கணேசநாசன், அர்ஜுன நாணயக்கார உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் உரையாற்றவுள்ளனர். மாலை வேளையில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் யாழ்.மண்ணின் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் பண்பாட்டு நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொட, கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கலாநிதி பிராங்க் குணவர்த்தன அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அன்றைய அமர்வுகளில் ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன் மற்றும் பேராசிரியர் சாந்தி செகராஜசிங்கம் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர். மாநாட்டின் ஒரு பகுதியாக, ஆட்சி நிர்வாகம், சட்டவாட்சி, சூழல் மற்றும் காலநிலை மாற்றம், எண்ணியல் பொருளாதாரம் போன்ற பல்வேறு தலைப்புகளின்கீழ் ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக்கட்டுரைச் சுருக்கங்களை முன்வைக்கவுள்ளனர்.

சட்டத்துறையில் புதிய மாற்றங்களையும், சமகால சவால்களையும் ஆராயும் இந்தச் சர்வதேச மாநாட்டில் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-20)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.01.2026 | வெள்ளிக்கிழமை | 0791 | W | 0 7 7 5 1 6 |

### Super Ball DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 23.01.2026 | வெள்ளிக்கிழமை | 3057 | P | 01 04 08 64 |

### சனிதா DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.01.2026 | வெள்ளிக்கிழமை | L | 04 23 68 74 | 5218 |

### SASIRI DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 23.01.2026 | வெள்ளிக்கிழமை | 0887 | 24 28 36 |

### லக்ன ராசி DLB

| திகதி | தினம் | கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 23.01.2026 | வெள்ளிக்கிழமை | | 14 16 47 55 | 4769 |

### KAPRUKA DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 23.01.2026 | வெள்ளிக்கிழமை | X | 26 | 05 16 58 61 | 2233 |

### அத கோடிபதி DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 23.01.2026 | வெள்ளிக்கிழமை | K | 02 45 48 58 | 2883 |

'அஸ்வெசும' திட்டத்தில்

## இறந்தவர்களின் பெயரில் 22 இலட்சம் சுருட்டிய அதிகாரி!

கொழும்பு, ஜன.24

மதவாச்சிப் பிரதேச செயலகத்தில் ஏழை மக்களுக்கான 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில், உயிரிழந்தவர்கள் மற்றும் முதியவர்களின் பெயர்களைப் பயன்படுத்தி சுமார் 2.2 மில்லியன் ரூபா நிதியை மோசடி செய்த அதிகாரி ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.

மதவாச்சிப் பிரதேச செயலகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் பொருளாதார மேம்பாட்டுப் பிரிவினர் மேற்கொண்ட அதிரடி ஆய்வின்போதே இந்த மோசடி கண்டு பிடிக்கப்பட்டது.

தரவுத்தொகுப்பில் உள்ள சில ஓட்டைகளைப் பயன்படுத்தி, 2023ஆம் ஆண்டு முதல் இந்த அதிகாரி பணத்தைத் தனது கணக்குக்கு மாற்றி வந்துள்ளார்.

உயிரிழந்த பயனாளிகள் மற்றும் முதியவர்களின் பெயர்களில் வரவேண்டிய நிதியையே இவர் குறிவைத்துள்ளார். மோசடி செய்த பணத்தை மறைக்க, தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வங்கிக் கணக்குகளையும் இவர் பயன்படுத்தியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. மோசடி செய்யப்பட்ட 2.2 மில்லியன் ரூபா பணம் முழுமையாக மீட்கப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரி உடனடியாகப் பணியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டு, முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-இ)



## கொழும்பு மாநகரசபை ஊழல்கள்; முறைப்பாடு செய்யக்கோரிக்கை!

கொழும்பு, ஜன.24

கொழும்பு மாநகரசபையில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடிகளைக் கண்டறியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் மற்றும் தகவல்களைக் கோரியுள்ளது. 2010ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொழும்பு மாநகரசபையில் இடம்பெற்றன என்று கருதப்படும் முறைகேடுகளால் ஏற்பட்டுள்ள பெரும் நட்டங்கள் மற்றும் சேதங்களைக் கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஊழல்கள், மோசடிகள், குற்றவியல் ரீதியான நம்பிக்கை மீறல், அதிகாரம், அரசாங்க வளங்கள் மற்றும் வரப்பிரசாதங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல், சட்டவிரோத ஆட்சேர்ப்புகள், நியமனங்கள் மற்றும் கொள்முதல் வழிகாட்டல்களை மீறுதல், அசையும் மற்றும் அசையாச் சொத்துகளை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுவதில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் போன்றவை தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் தகவல்களை அந்த ஆணைக்குழு மக்களிடம் கோரியுள்ளது. (எ-இ)

## மீண்டும் மொட்டுடன் ரமேஷ் பத்திரண

கொழும்பு,ஜன.24

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்த முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரண, மீண்டும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவிடமிருந்து அவர் தனது நியமனக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். மீண்டும் கட்சியில் இணைந்த ரமேஷ் பத்திரணவுக்கு பெந்தர எல்பிட்டிய தொகுதி அமைப்பாளர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் அழைப்பாளர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ரமேஷ் பத்திரண கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் மொட்டுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சரவை அமைச்சராகப் பணியாற்றிய வராவார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கைவிட்ட வீட்டுத்திட்டங்கள்; ஆராய்ந்து தீர்வுகாண விசேட குழு!

**கொழும்பு, ஜன.24**
**நாடளாவிய ரீதியில் பெருமளவு வீட்டுத்திட்டங்கள் மக்கள் குடியேறாதநிலையில் உள்ளன. அவற்றில் காணப்படும் சிக்கல்களை இனங்கண்டு, அவற்றுக்குத் தீர்வுகாண விசேட குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப்பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த காலங்களில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அன்றைய அரசியல்வாதிகளின் நெருங்கியவர்களாகவும், வீட்டுத்திட்டத்துக்குப் பொருத்தமில்லாதவர்களாகவும் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அநுராதபுரம், ஹம்பாந்தோட்டை உட்படப் பல மாவட்டங்களில் வீட்டுத்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளநிலையிலும் மக்கள் அங்கு குடியேறாத நிலை காணப்படுகின்றது. அந்த வீட்டுத்திட்டங்கள் பொருத்தமற்ற இடங்களில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதும், சம்பந்தப்பட்டவர்களுக்கு வேறு இடங்களில் வீடுகள் இருப்பதுமே அதற்குக் காரணம் என்று ஊகிக்கமுடிகின்றது. உண்மையில் வீடு தேவையுள்ளோருக்குத்தான் இந்த வீடுகள் வழங்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் ஆராயவேண்டியுள்ளது. நாம் தற்போது வீடமைப்பு அதிகார சபையில் அதுதொடர்பான தகவல்களைக் கோரியுள்ளோம். அந்தத் தகவல்களைப் பெற்றுக்கொண்டு இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்வகையில் குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

## 3 வருடங்களாக ஏமாற்றிய போலி மருத்துவர் சிக்கினார்

மட்டக்களப்பு, ஜன.24
கடந்த 3 வருடங்களாக பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்துவந்த போலி மருத்துவர் ஒருவர் வாழைச்சேனைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை - செம்மண் ஓடைப் பகுதியில் 'கிளினிக்' நடத்திவந்த இவர், மருத்துவர் போன்ற உடையில் எடுத்த புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு மக்களை நம்பவைத்துள்ளார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் நடத்திய அதிரடிச் சோதனையில், அவரிடம் எந்தவித மருத்துவச் சான்றிதழ்களும் இல்லை என்பது அம்பலமானது.

அங்கிருந்த மருந்துப்பொருள்கள் மற்றும் உபகரணங்களைப் பறிமுதல் செய்த பொலிஸார், குறித்த மருத்துவரையும் கைதுசெய்துள்ளனர். (ச-இ)



## தொழுநோயாளர்கள் கடந்தாண்டில் 1,282

முல்லைத்தீவு, ஜன.24
2025ஆம் ஆண்டில் நாட்டில் மொத்தம் 1,282 தொழுநோயாளிகள் அடையாளங்காணப்பட்டுள்ளனர் என்று தொழுநோய் ஒழிப்புப் பிரசாரத்தின் இயக்குநர் மருத்துவர் யசோமா வீரசேகர தெரிவித்துள்ளார். புதியதாக அடையாளங்காணப்பட்ட நோயாளிகளில் சுமார் 10 வீதம் பேர் 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள். புதிதாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் கிட்டத்தட்ட எட்டு வீதம் பேர் ஏற்கனவே நோயறிதலின் போது குறைபாடுகளை உருவாக்கியிருந்தனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## அர்ஜுன ரணதுங்கவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை



கொழும்பு, ஜன.24
முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் அவரது சகோதரர் தம்மிக ரணதுங்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டுள்ளது. அதிக விலையில் 'ஸ்பொட் டெண்டர்கள்' மூலம் மசகு எண்ணெய் கொள்வனவு செய்ததன் ஊடாக இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்குச் சுமார் 800 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பிலேயே இருவருக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில்நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (எ-இ)

## மின்சார சொகுசு பஸ்களை இலங்கைக்கு வழங்கும் சீனா

இலங்கைக்கு 100 நவீன சொகுசு மின்சார பஸ்களை விரைவாக வழங்க சீனா நடவடிக்கை எடுத்துள்ளது என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஷென்ஹொங் தெரிவித்துள்ளார்.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க தேரர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்றபோதே சீனத் தூதுவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். எரிபொருள் பயன்பாட்டால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசடைவைக் குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. வழங்கத் திட்டமிடப்பட்டுள்ள ஒரு பஸ்ஸின் விலை சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் அமெரிக்க டொலராகும் என்றும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)







## கப்பலேறுது கம்பஸ்மானம்

தமிழர்களின்ர படிப்புக்கும், புலமைக்கும் அடையாளமா இருந்த எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மானம், இப்ப சந்தி சிரிக்கிற அளவுக்கு இருக்குது. ரண்டு கிழமைக்கு முன்னம் திறந்த மற்றும் தொலைக்கல்விப் பிரிவால நடத்துப்படுற, வெளி வாரி மாணவர்களுக்கான 'ஓரியண்டேசன் புரோக் கிராம்' (அறிமுக நிகழ்வு) நடந்திருக்கு. அங்க வந்த மாணவர்களுக்கு வழிகாட்டிக் கைநூலொண்டு குடுத்திருக்கினம். எந்தெந்தப் பாடங்களை எடுக்கலாம்? ஒவ்வொரு பாடத்துக்கும் கிரெடிட் எவ்வளவு? என்னென்ன சிலபஸ்? எண்ட விவரங்கள் அந்த வழிகாட்டிக் கையேட்டில இருக்குது. நல்ல வடிவான கலர் மட்டையில, பெருஞ்செலவில அச்சடிச்ச அந்தக் கைநூலைப் பார்த்த மாணவர்களுக்கு, 'அதிர்ச்சி' எண்டால் அப்பிடியொரு அதிர்ச்சி!

ஏனெண்டால், அதின்ர முகப்பு அட்டையில 'யாழ்ப்பாணம்' எண்டு இருக்கவேண்டிய இடத்தில, ஒரு 'ப்' கூடப்போட்டு 'யாழ்ப்ப்பாணம்' எண்டு அச்சடிச்சிருக்கினம். இதைப்பார்க்கேக்க, ஒருவேளை அரசாங்கம் கொண்டுவரப்போற புதிய கல்விச் சீர்திருத்தத்தில, இனிமேல் யாழ்ப்பாணத்தை அழுத்தமாச் சொல்லோணும் எண்டு இப்பிடி ரண்டு 'ப்' போடச்சொல்லிச் சட்டம் வந்திட்டுதோ எண்டுதான் கனபேர் நினைச்சவை. ஏனெண்டால் கம்பஸ்காரர் பிழை விடாயினமெல்லோ. படிப்பில மற்றவைக்கு வழிகாட்டவேண்டிய ஒரு பல்கலைக்கழகமே, தன்ர ஊர்ப் பேரைக்கூடச் சரியா எழுதத் தெரியாமல் இருக்குமெண்டதை ஆரும் நம்புவினமோ? ஆனால் இப்ப நம்பத்தான் வேணும்.

விசயம் அதுமட்டும் இல்லை; அந்த முன்னட்டையில இருக்கிற பல்கலைக்கழக முகப்புப்படமும், அதில இருக்கிற இலச்சினையும்கூட எங்கட யாழ்ப்பாணக் கம்பஸின்ர இல்லை! படத்தை டிசைன் பண்ணினவருக்கு 'கடும்பஞ்சி' போல. அதால ஆள் வேலை செய்யாமல் 'ஏ.ஐ' யிட்ட வேலையைக் குடுத்திருக்கிறார். அந்த 'ஏ.ஐ' யும் தன்ர இஷ்டத்துக்கு ஒரு கட்டடத்தையும், அதுக்கு மேல ஒரு இலச்சினையையும் கீறிப்போட்டு, 'யாழ்ப்ப்பாணம்' எண்டு தமிழையும் கொலை செய்து டிசைன் பண்ணியிருக்குது.

இப்பிடி ஒரு பிழையான படத்தை 'ஏ.ஐ' குடுத்தா, அதைச் சரிபிழை பாக்காமல் அப்பிடியே பிரிண்ட் பண்ணியும் போட்டினம். இத்தனைக்கும் லெக்சரர்மார், நிர்வாக அதிகாரிகள் எண்டு மெத்தப்படிச்ச மேதாவியள் கம்பஸில இருக்கினம். உந்த 'ஓரியண் டேசன் புரோக்கிராம்' நடக்கிறதுக்கு நாலைஞ்சு நாளைக்கு முன்னமே இந்தப் புத்தகங்கள் அச்சடிச்சு அடுக்கி வைச்சிட்டினம். ஆனால் இப்பிடிப் பிழையைக் கண்டுபிடிக்கக் கால இடைவெளி இருந்தும் ஒருத்தரும் அந்தப் புத்தகத்தை கையிலையும் தொட்டுப் பாக்கேலை போல, அப்பிடிப் பார்த்திருந்தால், முன் கவர்ல இருந்த பிழை உடன பிடிபட்டிருக்கு மெல்லோ. முன் கவரிலையே பல்கலைக்கழகத்தின்ர சீத்துவம் இப்பிடிப் பல்லிளிக்கு தெண்டால், உள்ளுக்க இருக்கிற சில பஸில இன்னும் என்னென்ன பிழையள் இருக்குமோ? எல்லாம் அந்தப்பரமேஸ்வரனுக்குத் தான் வெளிச்சம் கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் – காலி நோக்கிய தரிசன யாத்திரை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.24

இலங்கையில் நிரந்தர சாந்தி, சமாதானம், இனங்களுக்கு இடையே நல்லிணக்கம் நிலவ இறையருள் வேண்டி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து காலிச் சிவன் ஆலயம் வரை முன்னெடுக்கும் புனித திருத்தலத் தரிசன யாத்திரை நேற்று வெள்ளிக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகியது.

இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையில் இந்த யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது. குறித்த தரிசன யாத்திரையை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

தரிசன யாத்திரையில் கலந்துகொண்டுள்ளவர்கள் தெய்வீகப் பஜனை வழிபாடுகளுடன் பிரதான வீதி ஓரமாக அமைந்துள்ள பல்வேறு ஆலயங்களைத் தரிசித்தவாறு காலிச் சிவன் ஆலயத்தை அடைந்து நாளை சனிக்கிழமை அதிகாலை 06 மணி முதல் அங்கு இடம்பெறும் திருவாசக முற்றோதல் நிகழ்வில் கலந்து கொள்வர். (ச-66)






# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜன.24

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருவிழா அடுத்த மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 15 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக பெருவிழா இடம்பெறும். அடுத்த மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு திருக்கல்யாண உற்சவமும், 14ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலைக் கண்டகிக் கடலில் தீர்த்தோற்சவமும், அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என்று ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ ந.ரங்கநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார். (க-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக மகாபாரதத் தொடர் சொற்பொழிவு நேற்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியரும், சைவப் புலவருமான இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றினார். (ச-66)



# இளங்கலைஞர் மன்றத்தின் கலை நிகழ்வுகள் நாளை!

கொழும்பு, ஜன.24

இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாதாந்தக் கலை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மன்ற மாணவர்களின் இறைவணக்கம் மற்றும் தமிழ்த் தாய் வாழ்த்து இடம்பெறும். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சூரியகுமார் வாழ்த்துரையாற்றுவார்.

பத்மநாதன் சியாம்கிருஷ்ணா மற்றும் கணேஸ்வர குருக்கள் வித்தியாசாகர் ஆகியோரின் வயலின் இசை அரங்கேறவுள்ளது.

நிகழ்வுக்கு அணிசெய் கலைஞர்களாக மிருதங்கம் - முரளிதரன் சுலக்சன், கடம் - சரவணபவன் பிரணவன், மோர்சிங் - சோதிலிங்கம் சிவயெனன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

அத்துடன் கலைவாணர் வில்லிசைக் குழுவினர் 'ஆசைக்கு அளவில்லை' எனும் தலைப்பில் வில்லிசை நிகழ்வை வழங்கவுள்ளனர். நிகழ்வுக்கான அனுசரணையை சங்கீதவித்துவான் திருமதி வரதா விவேகானந்தன் வழங்கவுள்ளார். (ச)

# பஞ்சலிங்கத்தின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.24

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சியின் வடபிராந்திய மூத்த உறுப்பினர் கா.பஞ்சலிங்கத்தின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தலைமைநிர்வாகிகளான வெ.மகேந்திரன், க.தணிகாசலம், நி.பிரதீபன், நாடக ஆற்றுகையாளர் க.சீலன், சமூகச் செயற்பாட்டாளர் பொ.முருகேசு ஆகியோர் கலந்துகொண்டு நினைவுரைகளை ஆற்றுவர். (க-66)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாகமுடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகமுடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் தடைகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சியைக் காலையிலேயே தொடங்குவது நல்லது.

**சிம்மம்:** மனதில் ஒரு தெளிவற்ற நிலை காணப்படும். புதிய முயற்சிகள் இழுபறியாகும். சிலருக்கு தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத்துணைக்காக செலவுசெய்ய நேரிடும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கூடிய வரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக் கொள்வார்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சகோதரர்களுக்காக செலவுசெய்ய வேண்டி வரும் என்றாலும், மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மீனம்:** பொறுமையுடன்செயற்படவேண்டிய நாள். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# மலையகம் மட்டுமா அயலகம்..?

உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும்வகையில், தமிழ்நாட்டு அரசின் ஏற்பாட்டில் 'அயலகத் தமிழர்கள் விழா' முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. ஜனவரி 12ஆம் திகதி இடம்பெற்ற இந்த விழாவில் கனடா, பிரான்ஸ், பிரிட்டன், இலங்கை, மலேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் எனப் பலநூறு தமிழ்த்தலைவர்கள் கலந்துகொண்டனர். தமிழக அரசாங்கத்தால் ஒவ்வொரு வருடமும் முன்னெடுக்கப்படும் இந்த முயற்சிக்கு, தமிழ்த் தலைவர்கள் மத்தியில் வலுவான ஈடுபாடு இருக்கின்றதா? என்று கேட்டால், அதற்குரிய பதில் அவ்வளவு நேர்மறையாக அமையப்போவதில்லை. ஒரு சில தமிழ்த்தேசியத் தலைவர்கள் கடந்த காலங்களில் இதில் கலந்துகொண்டபோதிலும், தமிழர் தாயகத்தை அந்த நிகழ்வோடு ஒன்றிக்கச் செய்வதற்கு அவர்களால் இயலவில்லை என்பதே யதார்த்தம்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது பல்வேறுபட்ட அரசியல் விமர்சனங்கள் உள்ளன. குறிப்பாக, தி.மு.க.வின் கடந்தகால வரலாற்றில் ஈழத் தமிழர்கள் கசப்பான அனுபவங்களையும் விரும்பத்தகாத நினைவுகளையும் கொண்டுள்ளனர். எனினும், முதல்வர் ஸ்டாலினுடைய சில நகர்வுகள் மிகக் காத்திரமானவையாகவும், தமிழர்களை ஓரணியில் ஒருங்கிணைக்கும் சக்தியாகவும் உள்ளன என்றால் அதில் மாற்றுக்கருத்தில்லை. ஸ்டாலின் தனது அமைச்சரவையில், 'வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்' எனப் புதிய துறையை உருவாக்கியது தொடக்கம், ஈழத் தமிழ் அகதிகளுக்கான வீடமைப்புத்திட்டங்கள் வரை பல நல்ல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். எம்மைச் சுற்றியிருக்கும் புறச்சூழல் இவ்வாறிருக்கையில், நாங்கள் அந்தச் சூழலுடன் ஒன்றிக்க வேண்டியது அவசியம். ஆனால், ஈழத்தமிழ்த் தலைவர்கள் செய்யப் பின்னிற்கும் கருமம் இதுதான்.

அத்துடன், தமிழகத்தில் இடம்பெறும் அயலகத் தமிழர் விழாவென்பது சாதாரண நிகழ்வல்ல. அது உலகமெங்கும் பரந்துவாழும் எங்களின் உறவுகளுடைய சங்கமம். ஆதலால், அந்த விழாவில் எமக்காகப் பேசப்படும் குரல்கள் உலகமெங்கும் வலுவாக எதிரொலிக்கும். உதாரணமாக, இம்முறை அயலகத் தமிழர் விழாவில், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிதா நாதன் கலந்துகொண்டார். 'இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே' என நாடாளுமன்றத்தில் தீர்மானம் நினைவேற்றிய முதலாவது நாடுதான் கனடா. ஆனால், அத்தகைய பிரதிநிதியொருவருடன் உலகளாவிய 'தமிழ் மேடையில்' பரந்துபட்ட கலந்துரையாடலை மேற்கொள்ளும் வாய்ப்பை இம்முறை நாங்கள் தவறவிட்டிருக்கின்றோம். இவ்வாறாக எத்தனையோ பின்னடைவுகளுக்கும், தோல்விகளுக்கும் எமது செயற்பாடுகளே காரணமாக அமைகின்றன என்பதே நிதர்சனம்.


இதைவிடக் கசப்பான உண்மை யாதெனில், இவ்வருடம் அயலகத் தமிழர்கள் விழா நடைபெற்றதா? அது எப்போது நடைபெற்றது? என அநேகமான ஈழத்தமிழர்களுக்குத் தெரியாது. இந்த அறியாமையானது நலினப்பட்ட இராஜதந்திரத்தின் வெளிப்பாடே. தமிழகத்துடனான தொன்றுதொட்ட உறவை மேலும் பலப்படுத்தக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் இறுகப்பற்றிக் கொள்ளவேண்டும். மலையகத் தலைவர்கள் இந்த விடயத்தில் மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றனர். ஏனெனில் இந்தப் பற்றுதல்தான் தமது பிடிமானம் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர்.



## பொய்யாமொழி

**உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து**

**பொருள்:** அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காக்க வல்லவன், மேலான வீட்டிற்கு விதை போன்றவன்.




# போதைப்பொருள் சோதனை 10 சாரதிகள் சிக்கினர்

**கொழும்பு, ஜன.24**

**பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்நோக்கில், போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் சாரதிகளைக் கண்டறியும் விசேட சோதனையில் 10 சாரதிகள் போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.**

கடந்த 21ஆம் திகதி கொழும்பு பெஸ்டியன் மாவத்தை தனியார் பேருந்து நிலையத்தில் இந்த விசேட நடமாடும் ஆய்வகச் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

அங்கிருந்த பணியாளர்கள் மற்றும் 56 பேருந்து சாரதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறுநீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பரிசோதிக்கப்பட்ட 56 பேரில் 10 சாரதிகள் போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தமை உறுதிசெய்யப்பட்டது.

இவர்கள் ஐஸ், ஹெரோய்ன் மற்றும் கஞ்சா போன்ற மிக ஆபத்தான போதைப்பொருள்களைப் பயன்படுத்தியிருப்பது முதற்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

சிக்கிய 10 சாரதிகளுக்கும் எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், அவர்களின் சாரதி அனுமதிப்பத்திரத்தை நிரந்தரமாக இரத்துச்செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தற்போது மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திடீர் சோதனைகள், இனிவரும் காலங்களில் நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் முன்னறிவிப்பின்றித் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. (ச-இ)



# ஜிந்துப்பிட்டி துப்பாக்கிச்சூடு மேலுமொருவர் கைது

கொழும்பு.ஜன.24

ஜிந்துப்பிட்டிப் பகுதியில் அண்மையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் 24 வயதுடைய மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடற்கரை வீதிப் பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடம் இருந்து 24 கிராம் 300 மில்லிகிராம் 'ஐஸ்' போதைப் பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

# ஜோன்ஸ்டனின் மறியல் நீடிப்பு!

கொழும்பு.ஜன.24

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அவரது இரண்டு மகன்கள் உள்ளிட்ட சந்தேகநபர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான பாரவூர்தியை முறைக்கேடாக பயன்படுத்திய வழக்கு தொடர்பான விசாரணையின் போது வத்தளை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (ச)

# கொழும்புத் துறைமுகத்தில் போர்க்கப்பல்கள்

கொழும்பு.ஜன.24

இந்தோனேசிய மற்றும் ஓமான் கடற்படைகளுக்குச் சொந்தமான இரண்டு போர்க்கப்பல்கள் நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. (ச-இ)



# அரச நிதி முறைகேடு; அனுஷ பெல்பிட்ட கைது!

கொழும்பு.ஜன.24

இலங்கை ஊடகத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளரும், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகமுமான அனுஷ பெல்பிட்ட இலஞ்சஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் நிதி முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்தே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை - தை 11
25.01.2026
சுபநேரம் : 09.36 - 11.06
ராகுகாலம் : 05.06 - 06.36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசக விழாவும் பொங்கல் விழாவும்

யாழ்ப்பாணம், ஜன.24

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் நல்லூர் சங்கிலியன் மன்றமும் இணைத்து நடாத்தும் திருவாசக விழாவும் பொங்கல் விழாவும் சங்கிலியன் அரங்கில் இன்று சனிக் கிழமை மாலை 4 மணிக்கு மன்றத்தின் நிலையத்தின் தலைவர் வி.ஜனகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. ஆசியுரையை சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவஸ்ரீ சோ. கேதீஸ்வரக்குருக்கள் ஆற்றவுள்ளார். பிரதம அதிதியாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அநிருத்தனன், சிறப்பு அதிதியாக திருநெல்வேலி சைவ விருத்திச் சங்கத் தலைவர் எஸ். சத்தியேந்திரன், கௌரவ அதிதியாக லண்டன் சி. தர்மகுலசிங்கம் மற்றும் தொழிலதிபர் க. செந்தூரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். திருவாசக விழாவையும், தைப்பொங்கல் விழாவையும் முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட கலைசார் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளன. (ச)

## மரண அறிவித்தல்

மண் மகிழ 10 . 07 . 1935



கண் நெகிழ 22 . 01 . 2026

**செல்லர் சின்னத்துரை** (ஓய்வுநிலை ஆசிரியர்)

நெல்லியடி மகாத்மா வீதி ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சின்னத்துரை நேற்று முன்தினம் (22.01.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - லக்சுமி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோதிமுத்து அவர்களின் அன்புக் கணவரும், கொங்காராணி (வனிதா - ஜேர்மனி), சக்திராணி, குணராணி (ஜேர்மனி), மேகலாராணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தம் (பாபு - ஜேர்மனி), நல்லைநாதன், பாஸ்கர் (ஜேர்மனி), சதீஸ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தவனம் மற்றும் காலஞ்சென்றவர்களான சண்முகம், முருகேசு, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிந்துஜா, நிரோஜன், சவீதா, தாரிகா, தாணுஜன், விதுஷா, பானுஜன், நிலானி, சாமிலா, மகாஷ், முகேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 272 1216
076 693 2598

(CS 31070) A

தகவல்:
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 . 10 . 1950



மறைவு 16 . 01 . 2024

**பரராஜசேகரம் சிவநாதன்** (ரத்தி)
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இரண்டாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்


டச்சு வீதி,
மீசாலை வடக்கு,
மீசாலை.

(CS/60537) J-1

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 03 . 1950



மறைவு 23 . 01 . 2026

**கணபதிப்பிள்ளை வசந்தன்**

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஜின்னா வீதியை வசிப்பிடமாகவும், தற்போது இராமநாதன் கலட்டி, இருபாலையில் வசித்து வந்தவருமான கணபதிப்பிள்ளை வசந்தன் நேற்று (23.01.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மூன்றாவது மகனும், காலஞ்சென்ற குமரேசு சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தேவமணியின் (கிளி) அன்புக் கணவரும், தங்கலட்சுமி (கொலண்ட்), காலஞ்சென்ற செல்வராசா மற்றும் தர்மரத்தினம், தவலட்சுமி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி மற்றும் பரமேஸ்வரி, ஜெயலட்சுமி, ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனரும், பிரகலாதன் (ஆளுநர் செயலகம், வடமாகாணம்), பிரதீபன் (முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு வ.மா), அனுஷா (கனடா), சுகந்தினி (இருபாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராகினி, சுஜாதா (கோணாவில் காந்தி ஆ.வித்தியாலய ஆசிரியர்), இராஜேஸ்வரன் (கனடா), நந்தகுமார் (சிற்றி ஹாட்வெயார், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், நிஷங்கன், அபிநயன், தஸ்வின், தேஜஸ்வினி, சுருதி, சேந் (லண்டன்), வைஸ்ணவி, அகல்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 00 46 296
077 44 43 250
077 96 86 354

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31074) A

## மரண அறிவித்தல்



**குமாரசாமி கயிலாயநாதன்**

யாழ். நெடுந்தீவு மேற்கு, 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரமந்தனாறு, இரத்தினபுரம் ஆகியவற்றில் வசித்து வந்தவரும், முருகன் வீதி, கல்மடு நகர், இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கயிலாயநாதன் கடந்த 21.01.2026 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி வள்ளியம்மை தம்பதியரின் கனிஷ்ர புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கோகுலவதனன், பாரதி (ஆசிரியர், கிளி/தருமபுரம் இல.1 அ.த.க. பாடசாலை), பாலமுரளி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பரமலிங்கம், நீலயினார், காலஞ்சென்ற சிவநேசம், சிவக்கொழுந்து, காலஞ்சென்ற அரிகரமோகனதாஸ், காலஞ்சென்ற தம்பிராசா ஆகியோரின் சகோதரரும், பிரவினா (பிரான்ஸ்), பாலதி (லண்டன்), ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், சறோஜினிதேவி (லண்டன்), இராஜேஸ்வரி, புஸ்பலீலா, மங்கயற்கரசி (லண்டன்), சிவகாமசுந்தரி, பாக்கியலட்சுமி (கொழும்பு), கமலதாசன் சரஸ்வதி, காலஞ்சென்ற சிவராசா, காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, மஞ்சுளாதேவி ஆகியோரின் மைத்துனரும், ஜஸ்னிஜா, புவிசாளினி, அன்சன் (பிரான்ஸ்), பரணிதா (பிரான்ஸ்), கரிஸ்கா (லண்டன்), கார்மிகா (லண்டன்), கவினஜா (லண்டன்) ஆகியோரின் பேரனும், ஜோர்டனின் பூட்டனும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கல்மடுநகர், இராமநாதபுரம், கிளிநொச்சியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்மடுநகர், இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31071) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள்வேத நடமாடும் சேவை நெடுந்தீவில் ஆரம்பம்

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் சித்த ஆயுள்வேத நடமாடும் மருத்துவ சேவை நேற்று உத்தியோக பூர்வமாகத் தொடங்கிவைக்கப்பட்டது. நெடுந்தீவு பிரதேசசபைக்கு உட்பட்ட மேற்கு நூலகத்தில் இந்த நடமாடும் மருத்துவசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் மற்றும் கடைசி வாரம் வரும் வியாழக் கிழமைகளில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**The Royal College of Jaffna**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில
By ந.விக்னேஸ்வரன் ஆச்சார்யார்
குபேரன் கட்டடம்
பிரான்பற்று வீதி,
சங்கானை
தொடர்பு:
077 675 1649

## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
### உற்பத்திமுகாமையாளர் (ஒப்பந்தம்) பதவி

எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலைநாட்களில் ரூபா20/- செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 09.02.2026 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பதவி : உற்பத்திமுகாமையாளர் (ஒப்பந்தம்)
சம்பளம் : பொருத்தமான சம்பளம் வழங்கப்படும்.

**தகைமைகள் :**

1. B.Sc in Agriculture (hons) (Specialized in Food Science or Animal Science)
   அல்லது
   B.Sc in Food Science and Technology (hons)
   அல்லது
   Bachelor of Bio systems Technology (hons) (Specialized in Food Production Technology)
   அல்லது
   Any other Relavant Degree in Food Science and Animal Scienc
2. ஆங்கிலத்தில் தேர்ச்சி (எழுத, வாசிக்க) மற்றும் சிங்களம் பேசத் தெரிந்திருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. கணனி அறிவுடையவராயிருத்தல் விரும்பத்தக்கது.

**பொது நிபந்தனைகள் :**

1. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**24.01.2026** **தலைவர்**

(CR 46943) E

# மணி விழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்.



**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் மணிவிழாக்காணும் எங்கள் ஆசிரியர்**

## திருமதி மேரிசிசிலியா கிறிஸ்ரி ஞானராஜா
## (S.L.T.S - I) (பயிற்றப்பட்ட கத்தோலிக்கம்)

எமது கல்லூரியில் அளப்பரிய சேவையாற்றி இன்று (24.01.2026) மணிவிழாக்காணும் ஆசிரியையின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வு காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகிறோம்.

**சேவை விபரம்**

| | |
|---|---|
| ❋ யா/கச்சாய் அ.த.க பாடசாலை | - 17.08.1988 - 04.02.1991 |
| ❋ யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | - 05.02.1991 - 31.12.1992 |
| ❋ யா/மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோய மகா வித்தியாலயம் | - 04.01.1993 - 17.01.1993 |
| ❋ யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | - 18.01.1993 - 17.02.1997 |
| ❋ யா/கொடிகாமம் அ.த.க பாடசாலை | - 18.02.1997 - 15.02.1998 |
| ❋ யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி | - 16.02.1998 - 01.02.2015 |
| ❋ யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி | - 02.02.2015 - 23.01.2026 |

**வாழ்த்துவோர் :** ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

(CS 60524) E

# Glück Global வேலைவாய்ப்புகள்
## GLUCK GLOBAL PVT LTD

The Guide to Your German Dream

**வடமாகாணத்தில் விரிவடையும் முன்னணி கல்வி சேவை நிறுவனம் யாழ்ப்பாணத்தில் 5 பேர் கொண்ட குழுவை நாம் உருவாக்குவோம்.**

**ஏன் Gluck Global இல் இணைய வேண்டும்?**

- ✓ வடமாகாணத்தில் முன்னணி கல்வி நிறுவனங்களுடன் நம்பகமான கூட்டணி
- ✓ விரிவான பயிற்சி மற்றும் தொழில் வளர்ச்சி
- ✓ கவர்ச்சிகரமான கமிஷன் கட்டமைப்பு
- ✓ தொழில்முறை பணி சூழல்
- ✓ வளர்ச்சி வாய்ப்புகள்

**வேலைகள்**

1. தொழில் மேலாளர் (வாடிக்கையாளர் உறவு குழு மேலாளர்)
   1 பதவி / சம்பளம் : ரூபா 2,00,000 + கமிஷன்

**தகைமைகள்**

- தொழில் ஆலோசனை, கல்வி வழிகாட்டல் அல்லது மாணவர் வழிக்காட்டலில் 3-5 ஆண்டு அனுபவம்.
- கல்வி நிறுவனங்களுடன் உறவுகளை உருவாக்கும் திறன்
- குழு தலைமை மற்றும் பயிற்சி அனுபவம்
- தமிழ், ஆங்கிலத்தில் சிறந்த தொடர்பாடல்

**பொறுப்புகள்**

- 5 பேர் கொண்ட குழுவை வழிநடத்துதல்
- பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மையங்களில் உறவுகளை வளர்த்தல்
- மாணவர்கள், பெற்றோர்களுக்கு கல்வி பாதைகள் மற்றும் சேவைகள் குறித்து வழிகாட்டுதல்
- மாதாந்த இலக்குகளை அடைதல்

**2. தலைமை கல்வி, தொழில் ஆலோசகர்**

2 பதவிகள் / சம்பளம் - ரூபாய் 1,00,000 + கமிஷன்

**தகைமைகள்**

- தொழில் ஆலோசனை, மாணவர் வழிகாட்டல் அல்லது கல்வி ஆலோசனையில் 2-4 ஆண்டுகள் அனுபவம்.
- வலுவான ஆலோசனை திறன்கள் ( தேவை மதிப்பீடு, தீர்வு பரிந்துரை )
- குழுக்களுக்கு ( மாணவர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் ) விளக்கக் காட்சி வழங்கும் அனுபவம்
- விற்பனை இலக்குகள் மற்றும் செயல்திறன் அளவீடுகள்
- தொழில் முறை தகுதி

**பொறுப்புகள்**

- மாணவர்கள், பெற்றோர்களுக்கு கல்வி சேவைகள் குறித்து ஆலோசனை
- பள்ளிகள் மற்றும் நிறுவனங்களில் விளக்கக்காட்சிகள் நடத்துதல்
- வருங்கால வாடிக்கையாளர்கள் குழாமை உருவாக்குதல்
- வாடிக்கையாளர் இலக்குகளை அடைய உதவுதல்

**3. உப கல்வி, தொழில் ஆலோசகர்**

பதவிகள் / சம்பளம் - ரூபா 60,000 + கமிஷன்

**தகைமைகள்**

- தொழில் வழிகாட்டல் மாணவர் ஆலோசனை அல்லது வாடிக்கையாளர் தொடர்பு பாத்திரங்களில் 1-2 ஆண்டுகள் அனுபவம்
- வலுவான தொடர்பு மற்றும் தனிப்பட்ட திறன்
- விற்பனை மற்றும் ஆலோசனைகளை கற்பதில் விருப்பம்
- தமிழ், ஆங்கிலத்தில் சரளமாக தொடர்பாடும் திறன்

**பொறுப்புகள்**

- மூத்த ஆலோசகர்களுக்கு வாடிக்கையாளர் சந்திப்புகளில் ஆதரவு வழங்குதல்
- பின்தொடர்தல் அழைப்புகள் மற்றும் சந்திப்புகளை நடத்துதல்
- CRM தரவுத்தளத்தை பராமரித்தல்
- மாதாந்த செயல்பாடு மற்றும் இலக்குகளை அடைதல்

**4. பயிற்சியாளர் (விற்பனை பயிற்சியாளர்)**

பதவி / சம்பளம் - ரூபா 20,000

**தகைமைகள்**

- அனுபவம் தேவையில்லை (புதிய பட்டதாரிகள் வரவேற்கப்படுகிறார்கள்)
- கற்றுக்கொள்ளும் விருப்பம் மற்றும் உந்துதல்
- அடிப்படை தொடர்பாடல் திறன்கள்
- தமிழ், ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு

**பொறுப்புகள்**

- மூத்த குழு உறுப்பினர்களுடன் பணியில் பயிற்சி
- வாடிக்கையாளர் தரவுத்தள மேலாண்மை
- தொலைப்பேசி அழைப்புகள் மற்றும் சந்திப்பு ஒருங்கிணைப்பு
- விற்பனை செயல்முறைகளை கற்றல்

**5. உள்ளடக்க உருவாக்குனர் (CONTENT CREATOR)**

- சம்பளம் - ரூபா.50,000 முதல், வயது - 20 முதல் 30, பாலினம் - பெண்

**தகைமைகள்**

- நடிப்பு மற்றும் விளக்க காட்சிகளை வழங்குதல்
- தமிழ் ஆங்கிலம் தொடர்பாடல் திறன்
- உள்ளடக்கம் எழுதுதல் (Script)
- ஒளிபடக் கருவி (Camera) அல்லது கைப்பேசியில் காட்சி பதிவு செய்யும் திறன் இருத்தல்.

**பொறுப்புகள்**

- காட்சிகளுக்கான உரைகள் தயாரிப்பது
- வீடியோக்கள் உருவாக்குதல்
- நடித்தல் மற்றும் விளக்க காட்சிகளை பதிவு செய்வது

**நேர்முகத்தேர்வு**
**திகதி : 25.01.2026 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம்: காலை 10.00 - பிற்பகல் 5.00**
**இடம் : NORTH GATE HOTEL, CONFERENCE ROOM, STATION ROAD. JAFFNA**

**நீங்கள் கொண்டு வர வேண்டியவை:**

- ✓ புதுப்பிக்கப்பட்ட பயோடேட்டா ( 3 நகல்கள் )
- ✓ கல்வி சான்றிதழ்கள் ( அசல் + நகல்கள் )
- ✓ அனுபவ கடிதங்கள் / பரிந்துரைகள்
- ✓ தேசிய அடையாள அட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 . 05 . 1953



மறைவு
24 . 01 . 2012

## அமரர் கனகசபை விஜயரெத்தினம் (ஞானம்)

(உரிமையாளர்- ஞானம் பெயின்ற்ஸ்)

நீங்காத நினைவுகள் தந்து
நீண்ட தூரம் சென்று - ஆண்டுகள்
பதின்னான்கு ஆயினும்
ஆறவில்லை எங்கள் துயர்

காலங்கள் கடந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் - என்றும்
எங்கள் பொக்கிஷம் - அப்பா

எங்கள் இதயம் உள்ளவரை உங்கள்
நினைவுகளோடு நாமிருப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் இறைவனை வேண்டுகின்றோம்.


ஞானம் பெயின்ற்ஸ்,
558, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம்.

குடும்பத்தினர்.
விஜய் மஹால்,
பழைய தபாற் கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு.

(CS/31024) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு
05 . 01 . 1927



உதிர்வு
21 . 01 . 2026

## முத்துத்தம்பி ஒப்பிலாமணி

(ஓய்வுநிலை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் - உள்ளூராட்சி திணைக்களம், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் )

இடைக்காடு அச்சுவேலியினை பிறப்பிடமாகவும் உசன் மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி ஒப்பிலாமணி அவர்கள் 21.01.2026 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி- சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இந்திராணி, குருநாதபிள்ளை, செங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயலட்சுமி (கனடா), விஜயகுமார் (சுவிஸ்), விஜயராணி (கனடா), விஜயரத்தினம் (ஓய்வுநிலை ஆசிரியர்- யா/ நெல்லியடி மத்திய கல்லூரி, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), விஜயகுமாரி (கனடா), விஜயதாசன் (ஆசிரியர்-யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), விஜயகுலன் (கனடா), விஜயரூபன் (கனடா), விஜயபூசணி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் மற்றும் இராமஜெயம் (கனடா), செல்வராணி (சுவிஸ்), காலஞ்சென்ற இளையதம்பி (NSB வங்கி உத்தியோகத்தர்), ராகினி (ஆசிரியர்- யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), புஸ்பராஜா (கனடா), சோதிலட்சுமி (பிரதி விவசாயப் பணிப்பாளர், கிளிநொச்சி), சாந்தினி (கனடா), கலாவதனி (கனடா) ஆகியோரின் மாமனாரும் மற்றும் கோபிகா- மதன் (கனடா), பிருந்தன் (கனடா), விதுஷன்- சய்ரா (சுவிஸ்), காலஞ்சென்ற நிருஷன் (சுவிஸ்), வர்ஷா (கனடா), கௌதமி (ஆசிரியை- கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி)- ரகுராம் (நிலத்தோற்ற வடிவமைப்பாளர்- வவுனியா பல்கலைக்கழகம்), அபிராம் (விஞ்ஞானபீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்), அனுஷன்- மதுவந்தி (அவுஸ்திரேலியா), மதுஷா (கனடா), மதனிகா (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், கொழும்பு)- மதுரங்கன் (அவசர சிகிச்சை அதிகாரி, கொழும்பு), மிதுஷன் (கனடா), மைத்திரேயி (கனடா), சஜினி, அபிஷன் (கனடா) ஆகியோரின் அன்புப்பேரன் மற்றும் றியான், றிஷான், மிலான், அதிகன், அதிதன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (25.01.2026) 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'விஜயவாசம்'
உசன், மிருசுவில்.

தகவல்: குடும்பத்தினர்
(077 6125148, 077 6176868)

# மரண அறிவித்தல்



## விசுவலிங்கம் ஞானசவுந்தரி

காரைநகர் முல்லைப்பிளவை பிறப்பிடமாகவும் 538 பிள்ளையார் ஆலய வீதி, இரத்தினபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் ஞானசவுந்தரி 23.01.2026 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் விசுவலிங்கத்தின் (செட்டியார், லிங்கம் ஸ்ரோர்ஸ் பரந்தன்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், முத்துக்குமாரு - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், சசிகரன் (கனடா), நிதர்சன் (கொழும்பு), நிறஞ்சன் (அவுஸ்ரேலியா), தர்சிகா (தர்சிகா ஸ்ரோர்ஸ், பரந்தன்), ஜீவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறிஸ்கந்தராசா, பராக்கிரமதேவி, இராசம்மா, காலஞ்சென்ற தங்கமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், சகிலா (மென்பொருள் பொறியியலாளர் - Software Engineer), கார்த்திகாயினி (செலிங்கோ லைப் யாழ்ப்பாணம்), சதுர்சஷா (அவுஸ்ரேலியா), விஜிதரன் (தர்சிகா ஸ்ரோர்ஸ் பரந்தன்), அச்சுதன் (பீப்பிள்ஸ் லீசிங், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், வேதக்சா, கேதிகா, லகரிஸ், கிசாந், ஜினுசாந், கவிசாந், மிதுனிகா, மிதுன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தோற்றம்
14.05.1957

மறைவு
23.01.2026

தகவல்: குடும்பத்தினர்

(CS 60536) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைகளைக் கண்டு எமக்கு அச்சமில்லை

### நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 24

சிறைகளைக் காண்பித்து எம்மை அச்சப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. அது ஒருபோதும் நடக்காது என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இலங்கையின் அண்மைக்கால அரசியற் போக்குத் தொடர்பில் ஊடகங்களிடம் நாமல் ராஜபக்ச நேற்றுக் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே சிறைகளைக் காண்பித்து ராஜபக்சக்களை அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று கூறினார். சிறைகளுக்கு அஞ்சி அரசியற் பயணத்தைக் கைவிடும் தரப்பு நாமல்ல என்றும் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். ஆனால், மக்களின் அதிருப்தியையும், விரக்தியையும் புரிந்துகொள்ளும் நிலையில் அரசாங்கம் இல்லை. அரசியற் பழிவாங்கல்களில் ஈடுபட்டு காலத்தைக் கடத்தும் செயற்பாடுகளில் ஆளும் கட்சியினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், மக்களின் கோபத்துக்கு ஆளாகப் போகின்றனர் என்றும் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மக்களின் கருத்துக்களை செவிமெடுக்காத பட்சத்தில், அடுத்த தேர்தலில் மக்கள் வழங்கும் தண்டனை பாரதூரமானதாக இருக்கும். கிராமங்களில் எமக்கான ஆதரவு கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால், அரசாங்கம் அச்சமடைந்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-44)

### உரிய வெப்பநிலை பேணாது

# யோக்கட் விற்பனை ரூ. 20,000 தண்டம்

வாகன குளிரூட்டியில் உரிய வெப்பநிலைக்குப் பதிலாக, அதிக வெப்பநிலையில் யோக்கட்டுக்களை வைத்திருந்தமைக்காக பிரபல நிறுவனமொன்றின் யாழ். மாவட்ட விற்பனைப் பிரதிநிதிக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

நெல்லியடிப் பகுதியில் உணவுப்பொருள்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களை கரவெட்டிப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி, மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது, வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிப்பதற்காக யோக்கட் ஏற்றிவந்த வாகனத்தைச் சோதனையிட்டபோது, அதன் குளிரூட்டியில் இருக்கவேண்டிய வெப்பநிலையை விடவும் அதிக வெப்பநிலையில் யோக்கட்டுகள் வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு விதிகளுக்கு மாறாகச் செயற்பட்டமைக்காக அந்த நிறுவனத்தின் யாழ். மாவட்ட விற்பனை முகவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, விற்பனைப் பிரதிநிதி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டமும், ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (ச-9)

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் புதிதாக தரம் 6 இற்கு மாணவர்களை இணைக்கும் வரவேற்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மாணவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய இசையுடன் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர். (ச-113)



# மரதன் ஓட்டம்

*யாழ்ப்பாணம், ஜன. 24*

*கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் மரதனோட்ட நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.*

*குறித்த நிகழ்வு வித்தியாலய முன்றலில் காலை 5.30 மணியளவில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.* *(ம-40-17)*

**வீட்டு வேலையாளர் தேவை**

வயோதிப ஆண் ஒருவரைப் பராமரித்தல், வீட்டுச் சமையலுக்கு உதவுதல் மற்றும் ஏனைய வீட்டு வேலைகள் செய்வதற்கு பணியாளர் உடன் தேவை.

தொடர்பு: 077 277 3612

**ஏஞ்சல் சர்வதேச பாடசாலை**
**மானிப்பாய்**

**பதவி வெற்றிடம்**

சாரதி (Driver)

**தகைமைகள்**

* சாரதி அனுமதிப்பத்திரம் (பாரவூர்தி) உடையவராக இருத்தல் வேண்டும்.
* வயதெல்லை: 35 - 55
* ஆகக்குறைந்தது 02 வருட அனுபவம்.
* யாழ்ப்பாணம், மானிப்பாய் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**மேலதிக தகவல்களுக்கு:**
077 844 8020, 077 588 9081

Angel International School, Mathers Lane, Manipay




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதத் தடைச்சட்ட விவகாரம்

# அரசின் மாற்றுச் சட்டத்திலும் ஆபத்தான அம்சம் தாராளம்!

## வலி.தென்மேற்குச் சபை கண்டனம்!

யாழ்ப்பாணம், ஜன. 24
பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டுவரப்படவுள்ள, பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்துக்கு வலி.தென்மேற்குப் பிரதேசசபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேசசபை அமர்வு தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது, பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டுவரப்படவுள்ள, பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டத்துக்கு எதிரான பிரேரணையை தவிசாளர் முன்வைத்தார். இந்தப் புதிய சட்டவரைவில் ஆபத்தான அம்சங்கள் உள்ளதால், அதைக் கண்டிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் அமைந்திருந்தது. இந்த நடவடிக்கைக்கு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஆதரவு வழங்கவில்லை. எனினும், ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம-27)

### மக்கள்...

மாநாட்டில் கலந்துகொண்ட பிரதமர் ஹரிணி நேற்று நாடு திரும்பியதும், முதலாவது அலுவலாக நாடாளுமன்றம் சென்றார். அங்கு உரையாற்றும்போதே, 'மக்கள் கோரினால் பதவிவிலகத் தயார்' எனக் கூறியுள்ளார். கடந்த ஆட்சியாளர்களைப் போன்று பதவியைப் பிடித்து வைத்திருக்கும் எண்ணம் இல்லை என்றும் பிரதமர் தெரிவித்தார்.
பொய்யான காரணங்களைக் கூறி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கே எதிரணி முயற்சிக்கின்றது. டிசெம்பரில் தமது அணியில் இருந்து புதிய ஜனாதிபதி வருவார் என்றார்கள், இப்போது ஏப்ரலில் புதிய ஜனாதிபதி வருவார் என்கின்றனர். இவ்வாறான கருத்துக்களுக்கு அச்சப்படும் தரப்பு நாமல்ல என்றும் பிரதமர் ஹரிணி கூறினார்.
எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று நீண்டகாலமாகத் தெரிவித்து வருகின்றனர். அத்தகைய பிரேரணை வரவேண்டும் என்பதுதான் எனது எதிர்பார்ப்பாகவும் உள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முகம்கொடுப்பதற்காகவே சுவிட்சர்லாந்தில் இருந்து நாடுதிரும்பியவுடன் நாடாளுமன்றம் வந்துள்ளேன். எனவே, எனக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருமாறு எதிரணிகளைக் கோருகின்றேன் என்றும் பிரதமர் ஹரிணி மேலும் தெரிவித்தார். (அ-ம-44)

### வர்த்தகக்...

தில் விமர்சித்துள்ளார்.
வர்த்தகக் கண்காட்சியின் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்ட பின்னர், இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் உள்ளதாவது:
வர்த்தகக் கண்காட்சி என்ற பெயரில் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியை குப்பை மேடாக்கும் செயற்பாடே இடம்பெற்று வருகின்றது. அத்துடன், உள்நுழைவுக் கட்டணத்தை அதிகரித்திருப்பது மக்களுக்கு விரோதமான செயற்பாடாகும் - என்றுள்ளது. (அ-ம-26)

### மன்னார்...

பெற்றது. இதன்போதே, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையை மத்திய அரசின் அதிகாரங்களின் கீழ் ஒப்படைத்து, விரைவான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது என்ற தீர்மானம் முன்வைக்கப் பட்டது. இதற்குத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.
இதையடுத்து, தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்து வாக்களித்த போதிலும், ஏனைய உறுப்பினர்களின் ஆதரவு நிலைப்பாட்டால் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
(அ-ம-இ)


### ஜனாதிபதி...

விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் இன்று இனவாதத்தை பரப்பும் பிரதான நபராக ஜனாதிபதியே இருக்கின்றார். இனவாதத்தை விதைக்கவே வடக்கிலுள்ள விகாரைக்கு பௌத்தர்கள் வருகின்றனர் என கூறியுள்ளார். அதாவது இனவாதத்தை விதைக்க வருபவர்களை அடித்து விரட்டுங்கள் என்பதையே இதன்மூலம் மறைமுகமாக கூற முற்படுகின்றார். எனவே, இனவாதத்தை பரப்புவது யார்? தமிழ் இனவாதியொருவர்கூட இப்படியான கருத்தை வெளியிட்டதில்லை - என்றார். (அ-ம-44)

வேலைக்கு பெண்பிள்ளை தேவை
மானிப்பாய் கட்டுடையில் அமைந்துள்ள கடைக்கு
(பிறின்டேர்ஸ்) பெண் பிள்ளை ஒருவர் தேவை.
(ஓரளவு கணனி அறிவு உள்ளவர் விரும்பத்தக்கது.)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
076 669 8380
(CS/60539) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 01 . 1944



இறப்பு 23 . 01 . 2026

### திருமதி கதிரமலை பரமேஸ்வரி

கலட்டி சந்தி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரமலை பரமேஸ்வரி அவர்கள் நேற்று (23.01.2026) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் தில்லையம்பலம் - பாக்கியவதி தம்பதியரின் அன்பு மகளும், வைரவிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், கதிரமலையின் அன்பு மனைவியும், வைதீகன் (கோபி), கல்யாணி (இந்து- லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராதிகா, தர்மசீலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சால்மதியின் பேர்த்தியும், அமரர் தர்மலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவயோகம், அமரர் ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி சந்தி, திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 12 . 1952



மறைவு 23 . 01 . 2026

### திருமதி செகராசசேகரம் பரமேஸ்வரி

தாமரைக்குளத்தடி, துன்னாலை, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செகராசசேகரம் பரமேஸ்வரி (23.01.2026) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் சின்னத்தம்பி சின்னாச்சியின் அன்பு மகளும், செல்லையா செகராசசேகரத்தின் (துன்னாலைக்கமம், 7ஆம் வாய்க்கால், கிளிநொச்சி) அன்பு மனைவியும், செல்லையா, சின்னாச்சியின் அன்பு மருமகளும், பாக்கியலட்சுமி (லண்டன்), காலஞ்சென்றவர்களான பத்தினிப்பிள்ளை, லட்சுமி, சுப்பிரமணியம், இராசரத்தினம் ஆகியோரின் சகோதரியும், ஜெயசீலன் (மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்), கீதா (யா/ஆனைப்பந்தி.மெ.மி.வித்தியாலயம்,), சத்தியசீலன் (பிராந்திய முகாமையாளர், வடக்கு, கிழக்கு, ஹற்றன் நஷனல் வங்கி), கிரிஜா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை), காலஞ்சென்ற தர்மசீலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கீதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) சத்தியபாலன் (வலயக்கல்விப் பணிப்பாளர், வடமராட்சி), நீரையா (முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழக கிளை), பிரபாகரன் (மருத்துவ பொறுப்பதிகாரி, சித்த போதனா வைத்தியசாலை, கைதடி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாரங்கி (ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்), புருஷோத்மன் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), நதிநயா (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), ஷாருமி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஷாமிக்கா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சாயீசன் (சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(CR 46948) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்சக்களைப்...

நாடாளுமன்றத்தில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
கிவுல் ஓயா திட்டம் ராஜபக்சக்களால் தொடங்கப்பட்டது. ராஜபக்சக்கள் யார் என்பதை இந்த அரசாங்கத்தினர் அறிவார்கள். பிரதமரும் அறிவார். அவர்கள் இலங்கை இதுவரை கண்டிராத மிகக் கடுமையான இனவெறியர்கள். போருக்குப் பின்னர், எமது நிலத்தின் இனப்பரம்பலை மாற்றியமைப்பதற்காகவே இந்தத் திட்டத்தை அவர்கள் கொண்டுவந்தனர். போரால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறுவதற்கு முன்னர், அந்த நிலப்பரப்புகள் பறிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்களாக மாற்றப்பட்டன. இதன் மிகப்பெரிய செயற்றிட்டமாகவே கிவுல் ஓயா திட்டம் காணப்படுகின்றது. ஆதலால்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் தீர்க்கமாக எதிர்க்கின்றோம்.
தற்போதைய அரசாங்கத்தினர் ராஜபக்சக்களை இனவாதிகள் என்கின்றனர். ஆனால், நீங்களும் அதையேதான் செய்கிறீர்கள். இந்தத் திட்டத்தை செயற்படுத்த 7 பில்லியன் ரூபாவை மஹிந்த ஒதுக்கினார், மேலும் 2 பில்லியன் ரூபாவை அதிகரித்து இந்தத் திட்டத்தை நீங்கள் செயற்படுத்துகின்றீர்கள். இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது அப்பட்டமான இனவெறி இல்லையா? இதன் மூலம் நீங்கள் எங்களுக்கு சொல்லவரும் செய்தி என்ன?
நாங்கள் தனியார் நிலத்தில் கட்டப்பட்ட தையிட்டி விகாரை கட்டுமானத்தை எதிர்த்துப் போராடும்போது. அதனை ஜனாதிபதி இனவெறி என்று கூறுகிறார். தையிட்டி திஸ்ஸ விகாரைக்குரிய நிலம் ஏற்கனவே இருக்கும்போது, அங்கு அந்த விகாரை கட்டப்படவில்லை. மாறாக தனியாருக்கு சொந்தமான நிலத்தையே எடுத்துக்கொண்டனர். அது தனியார் நிலத்தை ஆக்கிரமித்தே கட்டப்பட்டுள்ளது என நான் ஜனாதிபதிக்கு சவால் விடுகிறேன்.
நாங்கள் ஆக்கபூர்வமாக இருக்க முயற்சிக்கும்போது நீங்கள் எங்களை விரக்தியடையச் செய்கிறீர்கள். நீங்கள் நியாயமற்ற முறையில் குறிவைக்கப் படும்போது, நாங்கள் அதற்கு துணைபோகவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். திஸ்ஸ விகாரை விடயத்தில் போராட்டம் நடத்தும் குடும்பங்களையும் அந்த மக்களையும் நாம் ஆதரிக்கிறோம்,
உங்களிடமும் எந்த மாற்றமும் இல்லை. இந்த அரசாங்கம் மற்ற அரசாங்கங்களிலிருந்து வேறுபட்டால், அரசாங்கம் வடக்கு - கிழக்கு மக்களை நடத்தும் விதத்தில் ஒரு முறையான மாற்றம் இருக்க வேண்டும் என்று பிரதமரிடம் கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலங்களில் முந்தைய அரசாங்கங்கள் செய்த அதே காரியங்களை நீங்கள் செய்துகொண்டு அவர்கள் இனவெறி பிடித்தவர்கள் என்றும், நீங்கள் இனவெறி பிடித்தவர்கள் அல்ல என்றும் சொல்ல முடியாது - என்றார். (அ-ம-26)

## முதலிடுவதற்கான...

போதிய வளங்கள் அற்ற தன்மை, நிர்வாகச் சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மிகவும் அதிகளவான தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது இலங்கை எதிர்கொள்ளும் மற்றொரு பிரதான பிரச்சினையாக அமைந்துள்ளது.
துருக்கியைப் போலவே, இலங்கையும் பெற்றோலிய விடயங்களில் இறக்குமதியைச் சார்ந்துள்ளது. பெற்றோலியத் துறையில் ஏற்படும் பாதிப்புக்கள் இலங்கையில் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும். ஆதலால், மத்திய கிழக்கில் உள்ள அனைத்து நாடுகளுடனும் இலங்கை சமநேரத்தில் நல்லுறவைப் பேண விரும்புகின்றது. ஆனால், இது அனைத்துச் சூழல்களிலும் சரிவருமா என்பது சிக்கலானது - என்றார். (அ-ச-இ)

## அனுமதிக்...

வகையில் எந்த விடயங்களும் இல்லை என பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்றுமுன்தினம் தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. இதற்கான உள்நுழைவுக் கட்டணம், 200 ரூபாவாக அதிகரித்துள்ளது. சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை அனைவரிடமும் இம்முறை ஒரே வகையான கட்டண அறவீடு மேற்கொள்ளப்படுகின்றது. டித்வா புயலால் மக்கள் இம்முறை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில், இந்தக் கட்டண அறவீட்டுக்குப் பலரும் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.
அதேநேரம், 200 ரூபாவை வழங்குவதற்கு ஏற்றவாறான விடயங்கள்கண்காட்சியில் இம்முறை இல்லை என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். குறிப்பாக, உள்ளூர் வணிகர்களையும், வணிக நிறுவனங்களையும் ஊக்கப்படுத்துவதற்குப் பதிலாக, முகப்பூச்சு, ஆடை அலங்காரங்கள், ஒப்பனைப் பொருள்கள் போன்ற அத்தியாவசியம் அற்ற விடயங்களின் விற்பனைக் கூடாரமாக வர்த்தகக் கண்காட்சி மாறி வருகின்றது என்றும் பொதுமக்கள் மேலும் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-ம)

## விசாரணைக்கு...

தீர்மானித்துள்ளது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 2018ஆம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கத்தை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் அகற்றியிருந்தார். இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மூன்று மனுதாரர்களால் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்கு பிரதம நீதியரசர் பத்மன் சூரசேன மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, இந்த வழக்கை தொடர்ச்சியாக விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் தீர்மானித்ததுடன், ஜூலை மாதம் 3ஆம் திகதி வழக்கைத் தவணையிட்டுள்ளது.
இந்துக் கல்லூரியில் இருந்து அகற்றப்பட்ட சிவலிங்கம் தற்போது பிறிதொரு இடத்தில், அதே தெய்வீக அம்சங்களுடன் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாக கடந்த தவணையின்போது, இந்துக் கல்லூரி அதிபரின் தரப்பால் சமர்ப்பணம் செய்யப்பட்டது. எனினும், நீதிமன்றில் கேட்டுக்கொண்டதற்கு அமைய, சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள புதிய இடத்தை ஆராய்ந்து அறிக்கையிடுமாறு துறைசார் அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருந்தது. இந்த அறிக்கை நேற்று நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.
அத்துடன், குறித்த விடயம் தொடர்பில் தனித்த ஆலயம் ஒன்றை அமைப்பதற்கான முடிவை கல்வி அமைச்சே எடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் தெரிவித்தது. இதையடுத்து, கல்வி அமைச்சின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரஜித பெரேரா, இது தொடர்பில் கல்வி அமைச்சுக்கு தான் அறிவிப்பதாகத் தெரிவித்தார். தொடர்ந்து இழுபறி நிலையில் வழக்கு இருப்பதன் காரணமாகவே, வழக்கைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.எஸ்.கணேஷராஜன், சட்டத்தரணி விதுஷா லோகநாதன் சட்டத்தரணி மங்களேஸ்வரி சங்கர் ஆகியோரும், முதலாவது எதிர்மனுதாரர் சார்பில் சட்டத்தரணி கலாநிதி குருபரனும் முன்னிலையாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தனியான...

அரசாங்கத்துக்கும் சட்டமா அதிபருக்கும் இடையில், கருத்து மோதல் உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஊடகங்களிடம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார். இதன்போதே, விடுதலைப் புலிகளைப்போன்று தனியான நிர்வாகத்தை நடத்த ஆளுங்கட்சி முயற்சிக்கின்றது எனக் கூறியுள்ளார்;.
விடுதலைப்புலிகள் தனியான அரசாங்கத்தை நடத்தினார்கள். அவர்களிடம் பொலிஸ், இராணுவம், நீதிமன்றம் என்பத தனித்தனியான இருந்தன. அவ்வாறே தற்போதைய ஆளுங்கட்சியான ஜே.வி.பி.யும் தனியான இராணுவம், தனியான பொலிஸ், தனியான நீதிமன்றம் என்பவற்றை உருவாக்க எத்தனிக்கின்றது என்றும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
கடந்த காலங்களில் இருந்த சட்டமா அதிபர்கள் பலர் பக்கச்சார்பாகச் செயற்பட்டனர். ஆனால், தற்போதைய சட்டமா அதிபர் சட்டத்துக்கு அமையவே செயற்படுகின்றார். எனவே, அவர் மீதான அழுத்தங்களை நாங்கள் எதிர்ப்போம். ஜனநாயகத்தை நேசிப்பவர்கள் இதற்கு இடமளிக்க கூடாது. தனிக்கட்சி ஆட்சியை நோக்கிப் பயணிப்பதை அரசாங்கம் கைவிட வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் கூறியுள்ளார். (அ-ம-44)

## அரசியலில்...

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
என்னை அரசியலில் இருந்து ஓரங்கட்டுவதற்கு பல்வேறு சதிகள் இடம்பெறுகின்றன. இதன் விளைவாகவே அண்மைக் காலக் குற்றச்சாட்டுக்கள் அமைந்துள்ளன. நாடாளுமன்றத்திலும் சரி, கட்சியிலும் சரி அத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.
நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று எனது பெயரைக் குறிப்பிட்டு பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். இதன் உண்மைத்தன்மையை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது.
'கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களுக்கு வசிப்பதற்கு இடமில்லை ஆனால் சிறீதரன் ஆயிரத்து 200 ஏக்கர் காணியை தன்வசப்படுத்தியுள்ளார். அதேபோல் சுமார் 7 கோடி ரூபா நிதியை சிறீதரனும் அவரது மகனும் வைப்பிலிட்டுள்ளார்கள்' என்று தயாசிறி ஜயசேகர சபையில் குறிப்பிட்டிருந்தார்.
பூநகரி மின்னுற்பத்தி திட்டத்திலும் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் தயாசிறி குறிப்பிட்டுள்ளார். எனது 16 ஆண்டுகால நாடாளுமன்றப் பயணத்தில் நீதியாகவே செயற்பட்டுள்ளேன். அரசியலமைப்பு பேரவையில் நீதியாகவும், சுயாதீனமாகவும் தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற அடிப்படையில் தீர்மானங்களை எடுத்துள்ளேன். எவரும் என்னை நிர்ப்பந்திக்கவில்லை. அரசாங்கத்துக்கு வால் பிடித்து அவர்களுக்கு சார்பாக செயற்பட வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை.
தயாசிறி பல கட்சிகளுக்கு தாவிச்செல்லும் ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியாவார். அவர் நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட விடயங்கள் முற்றிலும் தவறானவை. எந்த வங்கியில், யாரால், எப்போது நிதி வைப்பிலிடப்பட்டது என்பதை தயாசிறி குறிப்பிட வேண்டும்.
தயாசிறி ஜயசேகர நியாயமான சிங்கள பௌத்தர் என்றால் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் என்மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும். உண்மையில் அவர் ஆடையுடன்தான் நாடாளுமன்றத்துக்கு வருகிறார் என்றால் குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும் - என்றார். (அ-ம)

## பிரஜாசக்தி...

யில் அனுமதிக்க முடியாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வலி.தென்மேற்குப் பிரதேசசபை அமர்வு தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது, பிரஜாசக்தி திட்டத்துக்கு எதிராக, தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ரமணன் பிரேரணையை முன்வைத்தார்.
பிரேரணை மீதான உரையில் அவர் தெரிவித்ததாவது:-
பிரஜாசக்தி என்பது சட்டத்துக்கும், ஜனநாயகத்துக்கும் விரோதமானதாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் செயற்படுகின்ற நிலையில், மக்களின் பிரதிநிதித்துவத்தை கேலிக்கூத்தாக்கும் வகையிலேயே பிரஜாசக்தி செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது ஒரு குழப்பகரமான திட்டமாகும். இந்தத் திட்டத்தால் மக்களும் சமூக அமைப்புகளும் மிகவும் அதிருப்தியும், குழப்பத்திலும் உள்ளன.
உள்ளூராட்சி அமைப்புகள் சுயாதீனமாக இயங்குகின்ற நிலையில், எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தக் குழுவினரின் செயற்பாட்டை அனுமதிக்க முடியாது. ஆதலால், எமது சபையின் நிர்வாகக் கட்டமைப்பில் பிரஜாசக்தி குழுவினர் எந்தவொரு விடயத்தையும் முன்னெடுப்பதற்கு அனுமதியில்லை என்றார்.
இந்தப் பிரேரணைக்கு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். எனினும், ஏனைய அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு விவசாயக் கண்காட்சி இருநாள்கள் முல்லையில்!

**முல்லைத்தீவு,ஜன.24**

**வடமாகாண விவசாய அமைச்சின் வழிகாட்டலில், மாபெரும் விவசாயக் கண்காட்சி முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பயிற்சிநிலைய வளாகத்தில் எதிர்வரும் 26ஆம், 27 ஆம் திகதிகளில் இரு நாள்கள் நடைபெற வுள்ளது.**

'காலநிலைச் சவால்களை எதிர்கொண்டு நிலைபேறான விவசாயத்தை நோக்கி' எனும் தலைப்பில் இடம்பெறும் இந்தக் கண்காட்சியில் நெல் உற்பத்தித்திறன் மேம்பாடு, வீட்டுத்தோட்டம், மண்ணின்றிய பயிர்ச்செய்கை, காளான் வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற பல்வேறு தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

மேலும், பனை, தென்னை மற்றும் மர முந்திரிகை அபிவிருத்தி தொடர்பான விவரங்களும் வழங்கப்படவுள்ளன.

விவசாய ஆராய்ச்சிச் செயற்பாடுகள் விளக்கப்படுவதுடன், தரமான நாற்றுக்கள், மரக்கறி விதைகள், பழமரக்கன்றுகள் மற்றும் விவசாயப் பிரசுரங்கள் விற்பனையும் இடம்பெறும். அத்துடன் பண்ணை இயந்திரங்களின் பாவனை மற்றும் அறுவடைக்குப் பின்னான இழப்புகளைக் குறைத்தல் போன்ற நவீன முறைகளும் அறிமுகப்படுத்தப்படும். வடமாகாண விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து மத்திய விவசாயத் திணைக்களம், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம், கால்நடை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்கள் உள்ளிட்ட பல நிறுவனங்கள் இதில் பங்குபற்றவுள்ளன. இதில் விவசாயிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று பயன்பெறுமாறு முல்லைத்தீவு பிரதி விவசாயப் பணிப்பாளர் கே. சிவதீபன் அழைப்பு விடுத்துள்ளார். மேலதிக விவரங்களுக்கு 0212290006 என்ற தொலைபேசி இலக்கத்தையோ அல்லது ddamullaitivu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## கடந்தாண்டில் தேயிலை ஏற்றுமதியில் 1.5 பில்லியன் டொலர்

கொழும்பு,ஜன.24

இலங்கையின் தேயிலை ஏற்றுமதித் துறை 2025ஆம் ஆண்டில் குறிப்பிடத் தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட 'டித்வா' சூறாவளித் தாக்கத்தினால் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் சிறு பின்னடைவுகள் ஏற்பட்டபோதிலும், ஒட்டுமொத்த வருமானத்தில் இலங்கை 1.5 பில்லியன் அமெரிக்க டொலரை ஈட்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் 257.44 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது 2024ஆம் ஆண்டுடன் (245.79 மில்லியன் கிலோ) ஒப்பிடுகையில் 4.74% வளர்ச்சியாகும் என்றும் இலங்கை தேயிலைச் சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## பிரான்ஸ் தூதுவர் ரெமி அமைச்சர்களுடன் சந்திப்பு

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்போர்ட் மற்றும் துறைமுகங்கள், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க, பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு ஆகியோருக்கு இடையே விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பிராந்தியத் தொடர்புகளை வலுப்படுத்துதல், விமானப் போக்குவரத்து உட்கட்டமைப்பு அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முதலீடுகளை ஈர்த்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது எனத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் பிரதான மையமாக இலங்கை விளங்குவதால், பிரான்ஸிற்கு இது விசேட முக்கியத்துவம் வாய்ந்தது எனத் தெரிவித்துள்ள தூதுவர் ரெமி லம்போர்ட், இலங்கையுடனான இரு தரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்த பிரான்ஸ் தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் விமானப் போக்குவரத்தை மேம்படுத்த சிக்னல் அமைப்புகள், ரேடார் மற்றும் விமானக் கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பங்களில் பிரெஞ்சு நிறுவனங்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்த முடியும் எனத் தூதுவர் தெரிவித்துள்ளார். இலங்கையின் மூலோபாய ரீதியான அமைவிடம் வான்மற்றும்கடல்ஆகிய இருதுறைகளுக்கும் மிகவும் முக்கியமானது எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர், பிரான்ஸுடன் இணைந்து செயற்பட அரசாங்கம் ஆர்வமாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

**துரை திருமண சேவை**

ஐயனார் வீதி, சண்டிலிப்பாய். பதிவுகள் இலவசம்

எம்மிடம் சகல தரப்பினரது ஜாதகங்களும் உண்டு.


1998ம் பெண் V உத்தரம் 4 ம் பாதம் செவ் இல்லை பாவம் 23 Software Engineer மணமகளுக்கு அரசாங்க உத்தியோக மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 656 8282

(CS56540) J-1

**கண்டேனர் பெட்டி விற்பனைக்கு**

எம்மிடம் 20 அடி நீளமுள்ள இரண்டு கண்டேனர் பெட்டி (Container Box) விற்பனைக்கு உண்டு.



**ஆர்.என்.கொம்பனி**

150 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-

021-222 4021, 077 443 3708, 071 535 7803

(CS(60535) J-1

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் அரியாலை ஆனந்தம் வடலி வீதி, 3ம் ஒழுங்கை முகப்புடன் 3 பரப்பு 1 குளி காணி விற்பனைக்கு உண்டு.**


- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நண்ணீரூற்று.
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 400 m தூரம்.
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

**தொடர்பு:- 076 860 2770 076 987 8617**

(CS 31069) A

## மரண அறிவித்தல்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10.12.1951 | 17.01.2026 |



### தம்பிஜயா சிறிகுகநிமலன்

யாழ் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் யாழ் மணல்த்தறை லேன் மற்றும் ஜேர்மனி Dortmund ஐ வதிவிடமாகவும் கொண்ட தம்பிஜயா சிறிகுகநிமலன் (சிறி) 17.01.2026 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், தம்பிஜயா - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மலோஜனி (பத்மா) அவர்களின் பாசமிகு கணவரும், டினேஷ்குமார் (லண்டன்), சதீஷ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகாம்பிகை, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷரன், நிதீஷ், ஆருதி ஆகியோரின் அன்புப் பேரனும், தனலக்சுமி, காலஞ்சென்ற பாக்கியலக்சுமி மற்றும் சோதீஸ்மதி, செல்வநிதி காலஞ்சென்ற யோகராணி மற்றும் நேசமலர், காலஞ்சென்ற இரத்தினமலர் மற்றும் நவமலர், சிறிகுகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, நவரட்ணம், நடராஜா, பரமநாதன், சிவசிதம்பரம், தம்பையா மற்றும் யோகேஸ்வரன் சிவகௌரி, நிர்மலா காலஞ்சென்ற தனலக்சுமி மற்றும் நவலோஜனா, காலஞ்சென்ற சத்தியசீலன் மற்றும் வரதலக்சுமி, காலஞ்சென்ற சுகிர்தா மற்றும் ஜெயசீலன் ஆகியோரின் மைத்துனரும், விவேகானந்தா, காலஞ்சென்றவர்களான சிங்கராஜா, இராஜதுரை மற்றும் சத்தியா, சத்தியசீலன் காலஞ்சென்ற பாலசுப்ரமணியம் மற்றும் சிவாஜினி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.01.2026 திங்கட்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை Bestattungen, Friedhofstrase 42, 44581, Castrop - Rauxel நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: 00492319887762, 0049 1573 8748829

தகவல்: குடும்பத்தினர்

(CS 31067) E

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.